மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் மற்றும் பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளிமங்கலம் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் நக்கம்பாடி என்னுமிடத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் பண்டாரவாடை என்னுமிடத்தில் ஒரு கால்நடை மருந்தகமும் உள்ளது. மேலும் 3 கிலோ மீட்டர் தூரத்தில் கொல்லுமாங்குடி என்னுமிடத்தில் ஒரு கால்நடை கிளை நிலையமும் உள்ளது. எனவே மேற்கூறிய சூழ்நிலையில் கிளிமங்கலம் கிராமத்தில் ஒரு கால்நடை கிளைநிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு பதில் கொடுத்த அதிகாரி பெருமக்கள் கிலோமீட்டரை ரொம்ப குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள். எனவே அதனை மறுபரிசீலனை செய்து வருகின்ற ஆண்டிலே அதை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, அரசு அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை நிலையம் அமைக்க உள்ள விதிமுறைகள் மற்றும் நிதிநிலைமையை அனுசரித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 91, டாக்டர் க. கோபால், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

91 –

நன்னிலம் தொகுதியில் கரும்பு ஆலை அமைத்தல்

* 21592--**டாக்டர் க. கோபால்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நன்னிலம் தொகுதியில், கரும்பு ஆலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம். சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1994 மார்ச் 25]

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான நன்னிலத்தில் விளைகின்ற பெரும்பான்மையான கரும்புகள் எல்லாம் அங்கிருந்து 50,60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வடபாதிமங்கலத்தில் உள்ள ஆரூரான் ஷுகர் மில்லுக்கும் அதை அடுத்து தலைஞாயிறில் இயங்கிக் கொண்டிருக்கின்ற, நடிப்பிசை புலவருடைய பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்த கரும்பாலைக்கும் செல்லுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் பேரளம் பிர்க்கா கொல்லுமாங்குடியில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஆரூரான் சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான நிலங்கள் எல்லாம் கையகப்படுத்தி இன்று தயார் நிலையில் இருக்கிறது. அந்த இடத்தில் ஆலை துவங்கப்படுமா? புதிய ஆலை துவங்கப்படுவதற்கு என்னென்ன விதிமுறைகள் தகுதி அடிப்படையிலே இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தாலுக்கா என்பது நாகை –காயிதே மில்லத் மாவட்டத்தில் இருக்கிறது. அந்த நன்னிலம் தாலுக்காவில் உள்ள பேரளத்திற்கு திரு. ஆரூரான் ஷுகர்ஸ் ஒன்றாவது ஆலையை அந்தப் பகுதிக்கு மாற்றிவிட வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதி, மத்திய அரசு தன்னுடைய ஒப்புதலை அளித்திருக்கிறது. எனவே புதிய ஆலையை அங்கே அமைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் உறுப்பினர் அவர்கள் புதிய ஆலை அமைப்பதற்கு என்ன தகுதிகள் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஒரு புதிய சர்க்கரை ஆலை ஒரு பகுதியிலே அமைக்க வேண்டும் என்று சொன்னால், கீழ்க்கண்ட நிபந்தனைகள் இருக்க வேண்டும். (1) கரும்பு பயிரிட சுமார் 10,000 முதல் 15,000 ஏக்கர் நிலப்பரப்பு இருக்க வேண்டும். (2) ஆண்டு முழுவதும் கரும்பு விளைவிக்கத் தேவையான நிலத்தடி நீர் இருக்க வேண்டும். (3) தற்போது அமைந்துள்ள சர்க்கரை ஆலைக்கும், தொடங்க இருக்கும் சர்க்கரை ஆலைக்கும் இடையே 25 கிலோ மீட்டர் அளவுக்கு ஏரியல் தொலைவு இருக்க வேண்டும் (4) மாநில அரசின் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் கோட்பாடுகளின்படி புதிய சர்க்கரை ஆலைக்கும் அருகிலுள்ள ஆற்றுக்கும் இடையே குறைந்த அளவு ஒரு கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும். (5) அரைவைத் திறன் குறைந்தது 2500 டன் நாள் ஒன்றுக்கு இருக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.40.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லுமாங்குடிக்கு ஆரூரான் சர்க்கரை ஆலை வருவதற்கு மாநில

அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்துள்ளது என்று கூறியிருக்கிறார்கள். அந்த ஆலையை நடப்பு ஆண்டில் துவக்குவதற்கு மாநில அரசு முயற்சி செய்யுமா? மேலும் மாநில அரசு மத்திய அரசுக்கு புதிய ஆலைகளைத் துவக்குவதற்கு வேண்டுகோள் விடுத்துள்ளதா? அதனுடைய விவரங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிக்கு வடபாதிமங்கலத்தினுடைய ஆரூரான் சர்க்கரை ஆலை நம்பர் 1 பகுதியை மாற்றயிருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் புதிய ஆலை நிறுவுவதற்கு சாத்திய கூறுகள் இல்லை. நம்முடைய தமிழக அரசு 5 இடங்களிலே சர்க்கரை ஆலை தொடங்குவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. (1) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், காஞ்சிபுரம். (2) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூர். (3) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம். (4) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை. (5) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஆகிய இடங்களில் தனியாருக்கு ஆலை நிறுவுவதற்கு பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு நாங்கள் அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசின் அனுமதியை எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நன்னிலம் தொகுதியைப் பற்றியது. நன்னிலத்திற்கும் போளூருக்கும் வெகு தூரம்; உட்காருங்கள்.

வினா எண். 92, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

92 –

சத்துணவு மையங்கள் மூலம் பப்பாளி மற்றும் முருங்கை மரம் வழங்குதல்.

* 20031–**டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--